
# ஏழைதாசன்

## உலகத் தமிழர்களின் ஒப்பற்ற குரல்


▸ திருவள்ளுவர் ஆண்டு 2049 ▸ இதழ் எண் : 286 ▸ விலை ரூ.10/-

▸ மார்கழி (டிசம்பர்) 2018


# மூலிகை நெறிமுறை!
# ஆறாம் தலைமுறை!



மருத்துவர் **பா. இரவீந்திரன்,**

தலைவர்,

தமிழ் மாநில சித்த மருத்துவக் கழகம்,

காருகுடி சிவானந்தா சித்த வைத்தியசாலை,

திருத்துறைப்பூண்டி,

திருவாரூர் மாவட்டம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தம் புதிய
பிரெஞ்சு மொழிப் பேரகராதி
**H. நாகராஜன் M.A.,**
எழுதி வழங்கும்

# பிரெஞ்சு - தமிழ் அகராதி

**DICTIONNAIRE FRANCAIS MODERNE**
தற்கால பிரெஞ்சு மொழி அகராதி




## அகராதியின் சிறப்பு அம்சங்கள் :

- சர்வதேசத் தரத்திலான தயாரிப்பு
- 25,000 தலைச் சொற்கள்
- 15,000-க்கு மேற்பட்ட சொற்றொடர்கள்
- பல்லாயிரக்கணக்கான எடுத்துக்காட்டு வாக்கியங்கள்
- பிரெஞ்சு மொழி இலக்கணக் குறிப்புகள்
- முழுக்க முழுக்கக் கணினியின் உதவியுடன் தயாரிக்கப்பட்டது.
- முற்றிலும் புதுமையான, பூரணமான ஒரு அகராதி. பிரெஞ்சு கற்றுக்கொள்ள விரும்பும் அனைவருக்கும் வேண்டிய பயனுள்ள பல தகவல்கள்.
- உலகின் தலைசிறந்த அகராதிகளின் அமைப்பை அடியொற்றித் தயாரிக்கப்பட்ட தரமான அகராதி.
- பிரெஞ்சு மொழியைக் கற்க விரும்புவோரிடம் அவசியம் இருக்க வேண்டிய கையேடு.

இப்போது பாரீஸ் நகரில் பரபரப்பான விற்பனையில்...

உலக அரங்கிலே உங்கள் வேலை வாய்ப்புகளைப் பெருக்கிக்கொள்ள உதவும் இன்றியமையாத ஒரு நூல்.

பாரீஸில் அனைத்து வர்த்தக மையங்களிலும் தற்போது விற்பனைக்குக் கிடைக்கிறது.
பாரீஸ் மற்றும் பாரீஸின் புறநகர்ப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு வீட்டுக்கே நேரடியாக டெலிவரி செய்கிறோம்.
பிரான்ஸின் பிற நகரங்களிலும், ஏனைய ஐரோப்பிய நகரங்களிலும் வசிப்பவர்களுக்கு CHRONOPOST மூலம் அகராதியை விரைவாக அனுப்பி வைக்கிறோம்.

தொடர்பு முகவரி :
**H. Nagarajan, M.A.,**
60, Allée des kiosques, 94420 - Le Plessis Trévise, PARIS (East),
FRANCE . Tél:01 45 76 38 48 Cell / Portable : 0660 81 9665
E-Mail : Nagaradja50@yahoo.fr

Published with Financial Assistance from the Central Institute of Indian Languages (Department of Higher Education, Ministry of Human Resource Development, Government of India), Manasagangotri, Mysore -570 006 sanctioned vide letter F. No.53-10(1)/ 2016-17/ TAM / LM / GRNT dated January 27, 2017 under the Little Magazine scheme of Grant-in-Aid.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழைப் பயிற்றுமொழி ஆக்கிட



# உயிரை உருக்கிக் கொள்ளும் ஒரு நோன்பு

தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்த
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்
– என்றார் பாவேந்தர் பாரதிதாசன்

அந்த அமுதத் தமிழைப் பேசுவதை நிறுத்திக் கொண்டு, பாவேந்தரின் வார்த்தைக்குத் தக்க தமிழுக்குத் தன் உயிரை ஒப்படைப்பதற்கு உரிய காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார் திருப்பூரின் 80 வயது இளைஞர்! ஆம். அவர் இளைஞர்தான். கண்களில் வீசும் ஒளியின் வெளிச்சத்தில் கண் கண்ணாடி இல்லாமலேயே நுண்ணிய எழுத்துக்களை வாசிக்க முடிகிறது. நடுங்காத கரங்களின் விரல்கள் பற்றிய எழுதுகோலால் தெளிவாக உறுதியாக எழுதி எழுத்தால் பேசுகிறார்! ஆம். அவர் வாய் திறந்து பேசுவதை நிறுத்தி ஏழு மாதங்கள் கடந்து விட்டன.

ஆம். 2018 மார்ச் 24ஆம் தேதி தனது 80ஆவது வயதில் அடியெடுத்து வைத்த அன்று 'இயற்கை வாழ்வகம்' க.இரா. முத்துச்சாமி மௌன விரதம் என்ற தமிழ்த் தவத்தைத் தொடங்கி இருக்கிறார். தமிழகத்தில் உள்ள அரசு, தனியார் பள்ளிகளில் தொடக்க நிலை முதல் உயர்நிலைப் படிப்பு வரை அனைத்துப் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தனி மனிதனாக இவ்வியக்கத்தைத் தொடங்கியுள்ளார் அவர்.

"உலகில் பல நாடுகளில் தாய்மொழிக் கல்விக்கே முதலிடம் உள்ளது. தாய் மொழிக் கல்வியே ஒருவரின் அறிவை விரிவு செய்து, அவரின் பண்பை, சிந்தனையை, தொடர்பை வளம் பெறச் செய்து துணை நிற்கிறது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில தமிழில் பேசவும், எழுதவும் பெரிய தடுமாற்றம் உருவாகியுள்ளது. இங்கு தமிழ் போற்றப்படவில்லை. பள்ளிகளில் தமிழ்க் கல்வியின்மையே இதற்கு முக்கியக் காரணம். இதனால் நமது துயரத்துக்கு அளவில்லை. ஆனால் விடிவு நம் கையில் உள்ளது. பள்ளிப் படிப்பை இறுதி வரை தமிழிலே பயில்வதைக் கட்டாயப்படுத்த வேண்டும். இதற்காகவே தமிழைப் பயிற்று மொழியாக்கிடக் கோரி இந்த நோன்பு!" என்றார் முத்துச்சாமி.

தமிழகத்தின் தேசிய மரமான பனை மரங்களின் முன்னின்று உறுதியேற்றுக் கொண்டு முத்துச்சாமி நோன்பைத் தொடங்கி ஆறு மாதங்கள் கடந்து விட்டது. எப்போதும் போல் எந்த வேறுபாடும் இன்றி சுறுசுறுப்பாக இயங்கி வருபவரை அவரது இல்லத்தில் சந்தித்து நேர்காணல் செய்த போது தாள்களில் எழுதிக் காட்டியே பதிலளித்தார்.

1939ஆம் ஆண்டு திருப்பூரில் பிறந்த முத்துச்சாமி ஏழாம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர். அதற்கு மேல் படிப்பைத் தொடர இயலவில்லை. 15 வயதுச் சிறுவனாக பின்னலாடைத் தொழிலில் அடியெடுத்து வைத்து அதில் வெற்றிகரமாகச் செயல்பட்டார். இயற்கை மீது தீராத காதல் கொண்டவர். இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையைக் கடைப் பிடிக்க வேண்டும் என்று முயன்று வருபவர். அதற்கேற்ப தன் தொழிலும் இயற்கை வண்ணங்களைக் கொண்டு பின்னலாடைகளுக்கு வண்ணம் ஏற்றும் முயற்சியில் வெற்றி கண்டவர். பா. ஜீவானந்தத்தை ஆசானாகப் போற்றி பொதுவுடைமை இயக்கத்தில் பணியாற்றியவர். தன் தனிப்பட்ட வாழ்விலும் எத்தனையோ பின்னடைவுகள் ஏற்பட்ட போதும் கலங்காமல் உறுதியோடு நின்று மீண்டவர். தாய்த் தமிழும், இயற்கைச் சூழல் பாதுகாப்பும் தன் இரு கண்கள் எனக் கொண்டு செயல்பட்டு வருபவர்.

தாய்த்தமிழ்ப் பள்ளிகள் தொடங்கப்பட்டபோது அவற்றின் வளர்ச்சிக்கு தீவிரமாகச் செயல்பட்டவர். தமிழைச் செம்மொழியாக அறிவிக்கக் கோரி தலைநகர் டெல்லியில் நூறு தமிழ் அறிஞர்களுடன் சென்று சாகும் வரை உண்ணா நோன்பை மேற்கொண்டு போராடியவர். அவிநாசிக்கு அருகே எட்டு ஏக்கர் நிலப் பரப்பில் 'அன்னைப் பொழில்' அமைத்து முற்றிலும் பசுஞ்சோலையாக மாற்றினார். தான் வசிக்கும் வீட்டையும் இயற்கை எழிலோடு, எளிமையாக வைத்திருக்கிறார்.

தாய்மொழி வழிக் கல்வி என்பது அடிப்படையான கோரிக்கை. இதற்குத் தனி மனிதராகப் போராடுவது தமிழக ஆட்சியாளர்களை அசைத்து விடுமா? என்று கேட்டதற்கு, "இந்தப் போராட்டம் மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தத்தான். இந்தக் கோரிக்கையின் மீது மக்களை ஒன்றிணைப்பதே போராட்டத்திற்கான வெற்றி என்பது என் நம்பிக்கை. சற்றுக் காலதாமதம் ஆனாலும் மக்களிடம் போய்ச் சேர வேண்டும். மக்களின் குரலாக மாறினால் அரசு அடிபணிந்தே தீரும்!" என்றார்.

தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கற்றவர்க்கே வேலை வாய்ப்பும், உயர் கல்வியும், பிற வாய்ப்புகளும் உண்டு என்ற வாழ்வுக் கொள்கை வேண்டும். சோறும், பொருளும் உலக மதிப்பும் தராவிட்டால் தமிழ் தீண்டா மொழியாகிச் செத்துவிடும். எனவே வேலைப் பிழைப்பு தமிழ் வழிக்கே வழங்கப்பட வேண்டும். எந்த இந்தியன் தமிழ் வழிக் கற்றாலும் அவர்களுக்கு தமிழ்நாட்டில் வேலை கிடைக்க வேண்டும். தமிழை வேலை மொழியாக்காதது பயிற்று மொழியாக மட்டும் வைப்பது பயனளிக்காது என்றார். ■

நன்றி : வே. தூயவன், செம்மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் வென்ற பாரதி வாழ்க!

பெற்றோர்கள் சின்னசாமி இலக்குமிக்குப்
பேர்புகழும் மகனானார் பாரதியார்
கற்றவர்கள் போற்றுகின்ற பலமொழிகள்
கரைகண்டார் பலபாடல் இயற்றினாரே!
அற்றைநாளில் அடிமையான நம்நாட்டு
அயலாரிடம் மக்களெல்லாம் துன்பமடைய
உற்றநிலையில் விடுதலையைப் பெறவேண்டி
உயர்கொள்கை வீரர்களால் போராட்டம்!

கவிதையால் மகாகவியாம் பாரதியும்
கருத்துகளால் மக்கள்தமை எழுச்சியூட்ட
புவியிலுள்ள மக்களெல்லாம் எதிர்த்துநின்று
புத்துலகைக் காணநாட்டில் ஒன்றுசேர்ந்தார்
குவிந்தகூட்டம் கண்டுமாற்றார் மருண்டுபோனார்!
குறிக்கோளில் காந்தியண்ணல் தலைமையில்
தவித்திருந்த அடிமைநீங்க போராடி
தனியுரிமை பெற்றனரே நாட்டுமக்கள்!

அருந்தமிழில் பலகவிதைகள் பாரதியார்
ஆற்றலுக்கு பாஞ்சாலி சபதநூலாம்
பெருமைமிகு எட்டையபுர மன்னர்க்கு
பேரவையின் களப்புலவர் பாரதியார்!
வருநாளில் நம்நாடு எல்லாமும்
வகைவகையாய் முன்னேற வழிசொன்னார்!
பெருங்காதல் குயில்பாட்டு பாரதிக்கு
பெருமைசேர் காவியமும் ஆகுமன்றே!

உலகெல்லாம் மகாகவியாய்ப் பேரெடுத்தார்
உயர்நாட்டில் தேசியத்தின் கவியானார்
வலம்வந்த பாரதியார் இதழ்நடத்தி
வலிமைகொள் பாடல்கள் வெளியிட்டார்!
சொலவொண்ணா யானையாலே தாக்குற்றார்
சோர்வடைந்து மறைந்துபோக சோகமக்கள்!
சிலகாலம் பாரதியார் வாழ்ந்தாலும்
சீருலகில் காலந்தாம் வென்றவராவார்!




- முனைவர்
ம. மயில் இளந்திரையன்,
கோயம்புத்தூர்-24.



நம்பர் 1 இணைய வார இதழ்
www.tamilauthors.com
தமிழ் ஆதர்ஸ்.காம்
வாரா வாரம்
வெண்பா கொண்டாட்டம்...
ஆசிரியர்: அகில், கனடா.
மின்னஞ்சல் :
editor@tamilauthors.com





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது சாதனை?

■ அடுத்தவரை வேதனைப்படுத்தி
பெறும் மிகப்பெரிய வெற்றியைவிட
மனிதரை நேசித்து
பெறும் தோல்வியே பெரிதானது!

■ தோல்விகளை நினைத்து
நித்தம் வாழ்வதை விட
புதுப்புது முயற்சிகளில்
வெற்றிக்கனியை பறித்தல் மேலானது!

■ விபரம் அறியாதவருடன்
வாதிட்டு நேரத்தை வீணடிப்பதை விட
தூரத்தே நின்று
வேடிக்கைப் பார்த்தலே உயர்வானது!

■ அடுத்தவரின் குறைகளை
பெரிதாக்கி ஒப்பிடுவதை விட
அவரின் நிறையைப் பாராட்டி
நட்புறவை வளர்த்தலே உறுதியானது!

■ அதிகார தோரணையிலே
தாழ்ந்து போவதை விட
விட்டுக் கொடுத்து
சாதிப்பதே உண்மையானது!

■ பலமுறை வீழ்ந்ததை
எண்ணி வருந்துவதை விட
புதிய பலத்துடன் வெற்றிக்காக
போராடுவதே ஒரு சாதனைதான்!

— பேராசிரியர் **வெ. நீலமேகம்,**
வேளச்சேரி, சென்னை-42.


# ஏழைதாசன்

எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்
- கண்ணதாசன்

மலர் 27 - இதழ் - 4
திருவள்ளுவர் ஆண்டு 2049 மார்கழி

சிறப்பாசிரியர்: மரு. க.கோ. மணிவாசகம்,
தேவூர்-611109, நாகை மாவட்டம். 70947-87716
வாட்ஸ்-அப் : 9385992164


## கட்டண விபரம்

**உள்நாடு (அஞ்சல் வழி)**

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | : | ரூ. | 120/- |
| வாழ்நாள் கட்டணம் | : | ரூ. | 2000/- |
| புரவலர் நன்கொடை | : | ரூ. | 10000/- |

**வெளிநாடு (வான்வழி)**

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | : | US$ | 25 |
| வாழ்நாள் கட்டணம் | : | US$ | 200 |
| புரவலர் நன்கொடை | : | US$ | 500 |

**விளம்பரக் கட்டணம்**

உள்நாடு

| | | | |
|---|---|---|---|
| முழுப்பக்கம் | : | ரூ. | 1000/- |
| அரைப்பக்கம் | : | ரூ. | 500/- |
| புகைப்படச்செய்தி கட்டணம் | : | ரூ. | 300/- |

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | EALAIDHASON |
| IFSC Code No. | : | IDIB 000 P050 |
| **வங்கி இலக்கம்** | : | A/c No. 478171653 |
| **முகவரி** | : | INDIAN BANK, PUDUKKOTTAI-622 001. TAMIL NADU, INDIA |

வங்கி இலக்கத்தில் கட்டணம் செலுத்துபவர்கள் வங்கி இரசீதை நகலெடுத்து அனுப்பி உதவுங்கள்.

இலக்கிய வேள்வி நடத்தும் ஏழைதாசன் இதழுக்கு கட்டணம் புதுப்பித்தும், புதிய வாசகர்கள் ஆண்டுக் கட்டணம் செலுத்தியும் ஆதரிக்க வேண்டுகிறோம்.

பண விடை (M.O) அனுப்ப வேண்டிய முகவரி:


**எஸ். விஜயகுமார்** பி.ஏ.,
ஆசிரியர், **ஏழைதாசன்,**
26, அடப்பன்வயல் 8ஆம் வீதி,
திருக்கோகர்ணம் (அஞ்சல்),
புதுக்கோட்டை - 622 002.

ealaidhason@gmail.com. /
iniyasmsidhazh@gmail.com.

0091 - 97 90 40 70 68
0091 - 94 42 77 68 68





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரபை வலுப்படுத்துவோம்! மரபை வளப்படுத்துவோம்!

## தமிழ்ப் பாரம்பரிய சித்த மருத்துவ பாதுகாப்பு இயக்கம்
## மாநகர் அமைப்பின் சார்பில் மாநில மாநாடு
## புதிய அறங்காவலர்கள், உயர்மட்ட குழுவினர் அறிமுக விழா

தலைமை : சித்தரடியார் மரு. **மு. தணிகாசலம்**, காங்கேயம்.
முன்னிலை : அரிமா **க.கோ. மணிவாசகம்**, தேவூர்.
மரு. **எம்.வி. பாலசுப்பிரமணியன்**, ஒட்டன்சத்திரம்.
மரு. **தமிழ்ச்செல்வி முருகையா**, செம்பிய மணக்குடி.
இயக்க மகளிரணி செயலர்

- சித்த மருத்துவம், மக்கள் மருத்துவம். இந்த மண்ணின் கலை அன்னியர் ஆட்சியில் மிகவும் பின்னடைந்த தமிழ் நுண்கலையான சித்த மருத்துவம்.

- வரலாற்று ரீதியாக வளர்ச்சியிலும், பரவுதலிலும் பின்தங்கி விட்ட சித்த மருத்துவ வளர்ச்சிக்கு தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

- இந்திய அரசிடமும் தமிழ்நாடு அரசிடமும் சித்த மருத்துவர்கள் ஒன்றிணைந்து நின்று சங்கங்கள் மூலம் குரல் கொடுப்போம்.

- பாரம்பரிய சித்த மருத்துவர்களின் பாதுகாப்பின் அவசியத்தை அரசுக்கு வலியுறுத்தும் கோரிக்கைகளும் தீர்மானங்களும் நிறைவேற்ற மாநில மாநாடு சென்னையில் சிறப்பாக நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

- மாநாட்டுப் பிரதிநிதிக் கட்டணம் ரூ. 700/– மட்டும். இடம், நாள் முன்பதிவு செய்வோருக்கு மட்டும் பின்னர் அறிவிக்கப்படும்.

முனைவர் மரு. **எம்.ஜே. ஜாகீர்உசேன்**,
மாநகர் தலைவர் **97896 58055**
மாநில மக்கள் தொடர்பாளர், சென்னை.

**பாக்கம் தமிழன்**,
மாநகர் மாநில செயலாளர்,
பூவிருந்தவல்லி, சென்னை.

**தமிழ்ப் பாரம்பரிய சித்த மருத்துவ பாதுகாப்பு இயக்கம்**,
மாநகர் அமைப்பு, சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில் முனைப்பில் சமூக சேவை ஆர்வம் உள்ளவர்களுக்கு அறக்கட்டளைகள் / சங்கங்கள் / என்.ஜி.ஓக்கள் / பவுண்டேசன்கள் துவங்க வேண்டுமா?

அறக்கட்டளை, சொசைட்டி, பவுண்டேசன் துவங்கி ஏழை எளிய மக்களின் கல்வி, சமூக மேம்பாடு, சுகாதார / மருத்துவ நலன், பொருளாதார மேம்பாடு, திறன் மேம்பாட்டுப் பயிற்சி, தொழில் முனைவோர் மற்றும் ஆன்மீக வளர்ச்சி, சித்தா, ஆயுர்வேத வளர்ச்சி போன்ற அறக்கட்டளைகள் ஆரம்பிப்பதற்கான அனைத்து ஆவணங்கள் முறைப்படி தயார் செய்து தரப்படுகின்றன.

மேலும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு வளரும் டிரஸ்ட்டுகள் மற்றும் சங்கங்களின் வளர்ச்சிக்கான அனைத்து ஆவணங்கள் முறைப்படி தயார் செய்து தரப்படுகின்றன.

தொடர்புக்கு :

**பி. குமரேசன்** எம்.ஏ., (ரூரல் சோசியாலஜி & பஞ்சாயத்துராஜ்)

பிரைஸ் என்.ஜி.ஓ. டிரையினிங் கம் ரிசோர்ஸ் கன்சல்டன்சி

காந்தி கிராமம் - வழி,

அம்பாத்துறை, திண்டுக்கல் மாவட்டம் - 624 302.

வாட்ஸ்-அப் : 9865031701, செல் : 7550374054

மின்னஞ்சல் : bkumaresan2009@gmail.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பினை!

- அறுத்த முருங்கைக் கீரைக்
கட்டுகளைச் சுமந்தபடி
ஒருவன் போகிறான்.

- தோலுரிக்கப்பட்ட கோழிகளை
பாத்திரத்தில் வைத்துத்
தூக்கியபடி இன்னொருவன்.

- வெட்டிய ஆட்டுக்கறியை
சைக்கிளில் வைத்துத்
தள்ளியபடி வேறொருவன்.

- இறந்து போன ஒருவரின்
உடலைச் சுமந்தபடி
புதைக்க நான்கு பேர்.

- உடலை மண் தின்கிறது
சந்தையில் மதிப்பில்லை
மற்றதை மனிதன் உண்கிறான்!

**- ப. பீர் இலாஹி,**
உத்தமபாளையம், தேனி.

# கருவறை அனுபவம்



■ கருவறையின் அனுபவத்தை
எந்தப் பிள்ளைகளாலும்
சொல்ல முடியாது.
ஆனால்
கருவைச் சுமந்த
ஒவ்வொரு தாயும்
சொல்லுவாள்.

■ மகனே!
இப்படி படுத்தால்
இப்படி உதைப்பாய்
அப்படி படுத்தால்
அப்படி உதைப்பாய்
ஆனால்
உதைக்காமல் மட்டும்
இருந்தால்
துடிக்கின்ற இதயம்
நின்று போய் விடும்.

■ மீண்டும்
நீ எப்பொழுது
உதைக்கிறாயோ
அப்பொழுதுதான்
என் இதயம் துடிக்குமடா
என் செல்ல மகனேயென்று!

- திருமதி. **பாரதிமுத்து**, வேலூர்-2.

# பரந்தாமா!

☐ ஆயர்பாடியிலும் இடமில்லை
அன்னை மடியிலும் இடமில்லை

☐ யாரும் உனக்குப் புகலிடமே
பாரில் தரவில்லை என்பதால்

☐ லீலைகள் பல புரிந்தவனே

☐ அடைக்கலம் கேட்டு நீ
ஆலிலையே போதுமென

☐ ஆனந்த குழவியாய்
அரிய துயில் கொண்டனையோ?

☐ நீ உறங்கிய காட்சிக் கண்டு
அன்னை மனம் –
எப்பாடு பட்டிருக்குமென
அறியாமல் போன துமேன்
பரந்தாமனே?

**– இறையடியான்,**
பெங்களூர்-46, கர்நாடகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நயத்தக்க நாகரிகம் !

நயத்தக்க நாகரிகம் வேண்டு வோர்கள்
நஞ்சுபெயக் கண்டுமுண்பர் என்று சொன்னார்
பயத்தக்க வள்ளுவத்தைப் படைத்த ஐயன்
பண்புடைய கண்ணோட்டம் அதிகா ரத்தில்!
செயத்தக்கக் கண்ணோட்டக் காரி கையே
சிறப்புடனே வையத்தை வாழ வைக்கும்!
உயத்தக்கக் கண்ணிற்குக் கண்ணோட் டந்தான்
ஒப்பில்லா அணிகலனாம் என்று ரைத்தார்!

கண்ணோட்டம் இல்லாதார் உயிர்சு மத்தல்
காணுமிந்த உலகிற்குச் சுமையே ஆவர்!
பண்ணோட்டம் பொருந்தாத பாடல் போன்று
பயனிலவாம் கண்ணோட்டம் இல்லாக் கண்கள்!
கண்ணோட்டம் காணாதார் முகத்தின் கண்கள்
கண்ணல்ல; புண்ணென்ற பேரே கொள்ளும்!
கண்ணோட்ட அணியில்லார் மண்பொம் மைக்குக்
காட்டாக இருந்திடுவர் கனிவே இன்றி!

ஒறுத்தாற்றும் பண்பினர்க்கும் இரக்கம் காட்டும்
உள்ளமதே நாகரிகம் உடைய தாகும்!
பொறுத்தாற்றிப் பிழைமறக்கும் நற்கு ணத்தார்
பொலிகின்ற நாகரிகம் பெற்றார் தாமே!
மறுத்தாற்றும் உறவுகட்கும் நன்மை செய்யும்
மாண்புடையர் நாகரிகம் நயத்தக் காரே!
வெறுத்தாற்றும் பகைவர்க்கும் இனிய செய்யும்
விருப்புடையர் நயத்தக்க பண்பர் அன்றோ?

– பாவலர் **தேவகி ஆனந்து**, புதுச்சேரி.

**அன்பு வாசகர்களே,**
**சந்தா கேட்டுக் கடிதம் வரும் என காத்திருக்காமல்**
**தாங்களே முன்வந்து அனுப்பலாமே!**

# காலங்கள் புலருமா?

குடித்தால் உன்னைக் குடிக்கும் குடியை
குடிப்பது சரியா சொல்லு? - பெற்றோர்
வடித்தார் உன்னை வாழ்ந்து சிறக்க
வாடுதல் முறையா சொல்லு?

கொடுத்தார் அன்பாய் கல்வி செல்வமே
கோபுரம் போலே மிளிர - நீ
மடுத்தால் மதுவை மண்ணின் மீது
மாண்புகள் தருமோ ஒளிர?

புல்லைத் தின்னும் மாடுகள் கூட
புரிந்து கொள்ளுதே சொன்னால் - அட
கல்லைச் செதுக்கி சிற்ப மாக்கிடும்
காட்சி படைப்பெலாம் உன்னால்!

ஆறறி வென்னும் மேலறி வோடு
அகிலம் ஆள்பவன் நீதான் - நீ
பேரறி வோடு புவியில் வலம்வர
பெருமை சேர்க்குமா மதுதான்?

உன்னைத் தொடரும் மக்கள் வாழ்வு
உயர்வைக் காணுதல் எப்படி? - அட
தன்னை இழந்து குடியில் மிதந்தால்
தருமோ வாழ்வில் நற்படி?

திருநாள் போலே தித்திக்கும் வாழ்வென
தேடிய வாழ்வே மலருமா? - வாழ்வை
கருநாள் ஆக்கும் கடைமக னானால்
காலங்கள் மீண்டும் புலருமா?

– பாவலர் **மலரடியான்**, கல்லக்குறிச்சி, விழுப்புரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேளாண்மை இயல் – 7

# பெயல் மழை இன்மையால் நிகழ்ந்த, நிகழும் நிகழ்வுகள் - அன்றும் இன்றும்



- மேனாள் பேராசிரியர், **கவிஞர் மித்ரா**,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்-2.

**கா**லத்தால் பெய்ய வேண்டிய மழை பெய்யாமையால் உலகை மழை காக்காமல் போயிற்று. சூரியனின் வெப்பம் நன்மை பயக்கவில்லை. உழவர்களின் கண்களில் நீர் பனிக்கச் செய்தது. கைகளைப் புடைத்தத் துன்பம் அடையச் செய்தது. பீர்க்கங் கொடி படர்ந்த வேலியையுடைய வீடுகள் பாழ் மனைகளாக நெருஞ்சிமும் செடிகள் அடர்ந்து காடெனப் படர்ந்து வழிகளும் நடந்து செல்வதற்கு அரிய கடுமையையுடைய காடுகளாக மழையற்ற உழவு நிலங்களாக இருந்ததை, (பதிற் : 26 : 6 – 11) என்னும் பாடலடிகளால் அறியலாம்.

காலத்தில் பெய்ய வேண்டிய மழை பொழியாது போனது. சூரியனின் வெம்மை உலக உயிர்களைப் பெரிதும் வாட்டி வதைத்து வெப்பத்தால் விளை நிலங்கள் உழாமல் போனது. அதனை,

''களிறு ஆடிய கலம் நெஞ்சில் ஆடா பெயல் மழை புரவு இன்று ஆகி, வெய்துற்று'' (பதிற் : 26 : 2, 6 – 7) என்பதனால் அறியலாம்.

நெடிய கோடைக் காலத்தில் பசுமை தொலைந்தது. உழவர்கள் உழு தொழிலை மறந்தனர். கலப்பைகள் உழு தொழிலற்றுக் கிடந்தன. அதனை,

நாடு வரம் கூர, நாஞ்சில் துஞ்ச, கோடை நீடிய வைது அறு காலை (அகம் : 42 : 5 – 6) என்னும் செய்யுளடிகளால் அறியலாம்.

அய்ந்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் ஆறாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தோன்றிய இலக்கியம் மணிமேகலை. அக்காப்பியத்தில் மழை இன்மையால் நாடு கடும் வெப்பம் எய்தி, பறவைகளும் மரங்களும் கரிந்து தீய்ந்ததையும், மக்கள் விளைப் பொருட்கள் கிடைக்காமல் அல்லலுற்றதையும்,

''பல்மரம் புகையப் புகை அழல் பொங்கி

மண்ணுயிர் மடிய மழை வளம் சுரத்தலின்'' (மணிமேகலை, பா.வெ.கா.சே. - 63) எனக் குறிப்பிட்டுள்ளது.

மழை இன்மையால் நிலங்கள் பயிர் செய்ய இயலாமற் போனது. விளை நிலத்தைத் தேடி பறவைகள் பசியோடு வயலுக்கு வருவதுண்டு. நிலம் பயிரின்றி பாழ்பட்டு கிடந்த நிலையில் நிலமெங்கும் கதிர் தேடி திரிந்ததை,

**தேடித் திரிந்தன**
**பசியோடு பறவைகள்**
**பாழ்பட்டு நிலம்!**

(சிந்தை பா. பார்த்திபன், அருவி-2011, ஜன,மார்ச். பக். 12) என்னும் அய்க்கூ கூறுகிறது.

மழை இன்மையால் பயிர்கள் கருகின. அந்நிலைத் தொடர்ந்தால் விவசாயம் ஒழியும் என்பதனை,

**குறையும் மழை**
**கருகும் பயிர் முகம்**
**ஒழியும் வேளாண்மை!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வல்லம் மா. கோவி, நெருஞ்சிப் பூக்கள், பக். 24) என்னும் அய்க்கூவால் அறியலாம்.

விதைகளை விதைத்து மழையை நோக்கும் புல்லிய புன்செய் நிலம் அகன்ற இடமுடைய நிலம் என்பதனை,

''வித்திவான் நோக்கும் புன்புலம் கண் அகன

வைப் பிற்று ஆயிறும்'' (புறம் : 18 : 23 - 24) என்னும் செய்யுளடிகளால் அறியலாம்.

வித்து விதைத்து மழையை நோக்கினர் அன்று. இன்று ஒரு கவிஞர் காய்ந்து, வெடித்துக் கிடக்கும் பாவ பூமியைக் கழுவி மழையே பொழிவதை நிறுத்தாதே என கவி வேண்டுகோள் விடுத்துள்ளதை,

**ஓ! மழையே**
**பொழிவதை நிறுத்தாதே!**
**பாவ பூமியைக் கழுவு.**

(சுடர் முருகையா, காக்கிச்சுடர், பக்.34) என்னும் அய்க்கூ சொல்கிறது.

உலக உயிர்கள் வாழ மண்ணில் உயிர்கள் வாழ, பறவை, விலங்குகள் உயிர் வாழ மழை வேண்டும் என்கின்றார் கவிஞர். அதை,

**உலக உயிர்கள்**
**மண்ணில் என்றும் வேண்டும்**
**மாமழை!**

(சுடர் முருகையா, காக்கிச்சுடர், பக். 34) என்னும் அய்க்கூ.

மழை பெய்யாது காடுகள் காய்ந்தன. மரங்களில் இலைகள் வீழ்ந்ததை, மழை அற்ற நிலையில் ஞாயிறின் வெப்பத்தால் பயிர்கள் அழிந்தன. நிலவுலகம் கீழ் மேலாக நிலை பெயர். காலமானது மழைப் பொழிவு அற்று போகும் காலத்து என்பதனை,

வானம் பெயல் வளம் கரப்ப கானம்

உலகறி நிலை இலவாக பல உடன் (அகம் : 291 : 1 - 2)

''நிலம் புடை பெயர்வது அன்றி கொல்

மண் உயிர் மடிந்த மழை மாறு அமையத்து'' (அகம் : 31 : 3 - 4) என்னும் செய்யுளடிகள் சொல்லும்.

மழைப் பொழிவற்ற காலத்தில் நிலம் வறண்டு கிடந்தது. பயிர்கள் ஏதுமின்றி நிலம் வறண்டு கிடந்தது. அவ்வறண்ட நிலத்தை மழை வந்து ஈரமாக்கவில்லை. மாறாக விவசாயியின் கண்ணீரே அந்நிலத்தை ஈரமாக்கியது என்பதனை,

**வறண்ட நிலத்தை**
**ஈரமாக்கியது**
**விவசாயியின் கண்ணீர்!**

(இளந்தென்றல், திசையெங்கும் அய்க்கூ, பக். 19) என்னும் அய்க்கூவால் அறியலாம்.

மழை வளம் இல்லாது போன நிலையில் விளைவு அற்றுப் போனது. அதனால் பசி வாட்டி வதைத்தது மக்களை. மக்கள் வறுமையால் கற்பழிந்தனர். அறங்கள் நாணின. அரசு செங்கோல் கோடுற்ற நிலையில் என்பதனை,

''கோள் நிலை திரிந்து நாழி குறைபட பகல்கள் மிஞ்சி

நீள் நில மாரியின்றி, விளைவு அஃதுப் பசியும் நீடிப்

பூண் முலை மகளிர் பொற்விற் கற்பிழந்து அறங்கள் மாற

காண இவ்வுலகி கேடாம் அரசு கோல் கோடின்'' (சீவக சிந்தாமணி : 255) என்னும் செய்யுட்றொடர்கள் கூறுகின்றன.

கோள் நிலை திரிந்தால் மாரிப் பொழியது என்பதனை,

கோள் நிலை திரிந்திடின்
மாரி வறங் கூடும்

(மணிமேகலை : 7 : 8 - 9) என்னும் பாடலடிகள் சொல்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோள் நிலை திரிந்ததால் மழை இன்றி உயிர்கள் வாழும் நிலையில் மக்கள் வருண தேவனுக்கு பூசை நிகழ்த்துவர். மழை பொருட்டு வழிபாடும், பாடலிசையும் நடைபெறும். வளி மண்டலத்தில் காற்றடுக்கில் வெப்பச் சலனம் நிகழ்வதால் மழைப் பொழிவதுண்டு. அதனை,

**ஆத்திகனுக்கு அருள்**
**நாத்திகனுக்கு வெப்பச் சலனம்**
**கோடை மழை!**

(சோமு. சக்தி, அய்க்கூ உலகம், பக்.81) என்னும் அய்க்கூ சொல்கிறது.

உழவுத் தொழிலுக்கு பயிர் செய்ய உழவர்கள் சிறந்த பல எருதுகளை கழுத்து மணிகள் ஒலிக்க பூட்டி உழுதனர். செஞ்சால் உழவர்கள் முல்லை நிலத்திற்கு அப்பால் உழவுத் தொழில் நன்கு நடைபெற பெரிய எருதுகளை வீட்டின் வாயிலில் கட்டியிருந்தனர். அவற்றை,

"சீருடைப் பல்பகடு ஒலிப்பப் பூட்டி"
(பதிற் : 58 : 12)

"குடி நிறை வல்கிச் செஞ்சால் உழவர்
நடை நவில் பெரும் பகடு புரவில் பூட்டி"

(பெரும் : 198 - 199) என்னும் பாடலடிகள் பகர்கின்றன.

உழவுக்கு ஆதாரமாக இருக்கும் உழவு மாடுகளையே உழவன் இன்று விற்றான். மழை இன்மையாலேயே அத்தகைய அவல நிலை வந்தது. ஆனால் உழவு மாடுகளை விற்ற இரவிலேயே பெயல் மழைப் பொழிந்ததை,

**உழவு மாடுகள்**
**விளை நிலங்கள்**
**விற்பனைக்கு!**

(கு.அ. தமிழ்மொழி, புத்தனைத் தேடும் போதிமரங்கள், பக். 52)

**உழவு மாடுகளை விற்ற**
**இரவில் பெய்தது**
**உழவு மழை!**

(நிலா கிருஷ்ணமூர்த்தி, திசையெங்கும் அய்க்கூ, பக். 128) என்னும் அய்க்கூக்களால் அறியலாம்.

இங்கெல்லாம் காலத்தில் பெய்ய வேண்டிய பெயல் மழை இன்மையால் உழவுத் தொழில் மடிந்ததையும், இயற்கை நிகழ்வுகளையும் பார்த்தோம். மழை இன்மைக்குக் காரணம் கோள் நிலை திரிந்ததே என்பதனையும், மழை இன்மையால் உழவர்கள் உழவு மாடுகளை விற்றதையும் அறிகிறோம். ■





# சிறுகதைப் போட்டி

❑ நுழைவுக் கட்டணம் : ரூ. 200/- (கதை ஒன்றுக்கு)

■ முதல் பரிசு – ரூ. 10,000
■ இரண்டாம் பரிசு – ரூ. 8,000
■ மூன்றாம் பரிசு – ரூ. 5,000

**விதிமுறைகள் :-**

1. தமிழில் அ/4 பக்க அளவில் இருக்க வேண்டும்.
2. நான்கு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. 35 வயதிற்கு உட்பட்டோர் அனைவரும் அனுப்பலாம்.
4. எந்த ஒரு பத்திரிகை மற்றும் இதழ் களிலும் வெளி வந்திருக்கக் கூடாது.

கதைகளை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல் முகவரி :-
engaoor2018@gmail.com
பேச : 78717 37762
www.engaoor.in

organize by எங்க ஊர் படைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுச்சேரி–11, கலாவிசு கவிதைகள்...

## என்றாவது ஒரு நாள் !

என்னுடைய புரிதலில் மட்டுமே
தொடர்ந்துக் கொண்டிருக்கிறது
நமக்கான அன்பு...
உன் வாழ்க்கைக்கும்
எனது வாசலுக்குமான தூரம்
அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது...
காத்திருத்தலிலேயே
கரைந்துக் கொண்டிருக்கின்றன
எனது நேரம்!

காரணங்கள்
ஆயிரம் இருந்தாலும்
வலியின் ரணத்திற்கு
மருந்து
நிச்சயமாக
உனது மௌனத்தில் இல்லை...

பேசாத வார்த்தைகள்
மௌனத்திற்கு வேண்டுமானால்
அழகு சேர்க்கலாம்
சத்தியமாக
காதலுக்கு இல்லை
என்பதை
என்றாவது ஒரு நாள்
உணரத்தான் போகிறாய்...
அப்போது நான்
உயிருடன் இருப்பேனா
என்பதே
இப்போதைய நிதர்சனம்.

## பரிசு

நீ சென்று விட்ட
பிறகு தான்
நினைவிற்கு வருகிறது...
உனக்குத் தர
ஆசையாக வாங்கிய
பரிசுப் பொருள்
என்னிடமே!

வாங்கிய போது
வெறும் பொருளாகத்தான்...
நீ வந்து சென்ற பின்னரோ
உன் நினைவின்
பொக்கிஷமாக!

நிச்சயமாகத்
தரப் போவதில்லை...
அடுத்த முறையும்
நினைவிற்கு
வந்தாலும் கூட!



## மாமியார் வீடு

கண்ணீர் சொரிந்துக் கொண்டே
செல்லுகிறது மணல்
ஆற்றிலிருந்து
அள்ளப்பட்டு லாரிகளில்
செல்லும் வழியெல்லாம்

தாய் வீட்டு
உறவுகளைப் பிரிந்து
மாமி வீடு செல்லும்
மணப்பெண் போல...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ இயற்கையைக் காப்பாற்று !
இயற்கை உன்னைக் காப்பாற்றும் !

அடுத்த மாதம் –
விழுப்புரத்தில்...

**நான்கு நாட்கள்**



# இயற்கை விவசாயத் திருவிழா

**கண்காட்சி – கருத்தரங்கம்**
**பாராட்டு விழா**

**டிசம்பர் 27 வியாழன் முதல் 30 ஞாயிறு வரை 2018**
**காலை 10.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை**

**ஸ்ரீ ஜெயசக்தி-பாலாஜி திருமண மண்டபம்,**
கிழக்கு பாண்டி ரோடு, ரெட்டியார் மில் பஸ் நிறுத்தம்,
விழுப்புரம்.

*அனுமதி இலவசம்...*

தங்களை குடும்பத்தோடு அழைக்கும்

**பசுமை இயற்கை விவசாய இயக்கம்**
**பசுமை சோலை – தமிழ்நாடு, புதுச்சேரி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, கேரளா மாநிலங்களின்
பாரம்பரிய விதைகள் கண்காட்சி

கண்காட்சியில் இடம் பெறும் விதைகள்
நெல் / கீரை / காய்கறி / மரவிதைகள் / மூலிகை விதைகள்
இன்னும் பல அரிய விதைகள்...

பண்ணைக் கருவிகள், இயந்திரங்கள்
இயற்கை விவசாயிகளின் விளை பொருட்கள்

அரிசி, சிறுதானியங்கள், பருப்பு வகைகள்
நாட்டுச் சர்க்கரை, கருப்பட்டி, தென்னைச் சர்க்கரை,
எண்ணெய் வகைகள், பழங்கள், கீரை, காய்கறிகள்

பாரம்பரிய அரிசியில் செய்த இனிப்பு, கார வகைகள்

-: கருத்தரங்கம் :-
கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு கருத்தரங்கம் -
மரம் வளர்ப்பு நீர் மேலாண்மை கருத்தரங்கம்

சிறுதானியங்கள் பயிறு சாகுபடி கருத்தரங்கம்
நெல் / கரும்பு / வாழை / சாகுபடி கருத்தரங்கம்
வீட்டுத் தோட்ட விவசாய காய்கறி சாகுபடி கருத்தரங்கம்

லயன் தேவூர் மணிவாசகம் குழுவினரின் மூலிகை கண்காட்சி
கீரமங்கலம் பவானந்தம்

பாரம்பரிய விதை சேகரிப்பு - உற்பத்தி கருத்தரங்கம்
மற்றும் இயற்கை விவசாயிகளுக்குப் பாராட்டு விழா

முன் பதிவு : 7811897510, 9790327890, 9514051403

பசுமை இயற்கை விவசாய இயக்கம்
பசுமை சோலை
தமிழ்நாடு - புதுச்சேரி.

www.pasumaisolai.org www.facebook.com/pasumaisolai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு அருள்

மண்ணின் மருந்தே உயர் மருந்து ! மனம் உடல் காக்கும் மாமருந்து !!



நவீன மருத்துவர்கள் கைவிட்டாலும் நலம் காணவும்
நாட்பட்ட எந்த நோய்ககும் மிக நல்ல தீர்வு பெறவும்



# ராசி

# சித்த மருத்துவமனை

பெரம்பலூர் - 621 212.

**(இனிய பதில் பெற, சித்தா பட்டிமன்றம் நடத்திட
96556-83683)**

**ஆலோசனைக் களமும் காலமும்**

1 / 504, எளம்பலூர்
சாலை,
மாவட்ட மத்திய கூட்டுறவு
வங்கி எதிரில்,
பெரம்பலூர் - 621 212.



காலை 5 மணி முதல் 7 மணி
நண்பகல் 1 மணி முதல் 3 மணி
இரவு - 6 மணி முதல் 8 மணி

## விருது பெறும் பாசிட்டிவ் பெருமாள்!




**சென்னையில் நடைபெற்ற விழாவில் தொழில் முனைவோர்கள், சிறு / குறு தொழில் அதிபர்கள், பெரு வணிகர்கள், ஏற்றுமதியாளர்கள், தொழிற்சாலை நிர்வாகிகள் ஆகியோருக்குச் சிறப்புப் பயிற்சி அளித்து நேர்மறை எண்ணங்களை உருவாக்கி, வெற்றி பெறச் செய்து, மாபெரும் தொழில் புரட்சிக்கு வித்திட்டு வரும் திரு. பாசிட்டிவ் பெருமாள் அவர்களது சேவையை பாராட்டி விருது வழங்கிய போது எடுத்த படம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டிற்கு ஒரு குறுந்தொழில்,
# ஊருக்கு ஒரு வேளாண் தொழிற்சாலை!

# இந்தியப் பனைப் பொருளாதார மாநாடு-2018

## CONFERENCE ON INDIAN PALMYRAH ECONOMY-2018

நாள் :
**திருவள்ளுவர் ஆண்டு 2049**
**சிலை (மார்கழி) 01,02**
**16, 17 - ஞாயிறு, திங்கள்**
**டிசம்பர் - 2018**



இடம்:
**ஆர்.எஸ். திருமண மண்டபம்,**
கிள்ளை, (பிச்சாவரம்),
(அலையாத்திக் காடுகள் -
நீர்வழிச் சுற்றுலா மையம்),
சிதம்பரம், கடலூர் மாவட்டம்.

விவசாயிகளுக்கு நிரந்தர வருமானம்!
மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கை!
கவலையற்ற வேளாண்மை!

வேலை தேடுவோருக்கு நிரந்தரவேலை!
பற்றாக்குறை வருமானத்தினருக்கு பகுதி நேர வேலை!
தொழில் முனைவோருக்கு புதிய தொழில் வாய்ப்புகள்!

## மரபுவழி வேளாண்மை!
## மரபுவழி கால்நடைகள்!
## மரபுவழி சித்த மருத்துவம்!

## சுதேசி இயக்கம்
## SWADESHI MOVEMENT

## உலகப் பனைப் பொருளாதாரப் பேரமைப்பு
## WORLD PALMYRAH ECONOMY CONSORTIUM

பேசி : 9445069900, 9790979797, 9445666700

**சின்னஞ்சிறு அலகுகள் எதிர்காலத்தின்**
**பெரும் பொருளாதாரம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சம் மாறிவிடு!

- சின்னச் சின்ன சுகங்களில்
  கிறுகிறுத்துத் திரிகிறாய்.
  விண்ணளக்கும் கனவுகளை
  வீணாக்கித் தொலைக்கிறாய்!

- பூப்பறித்து வா எனிலோ
  வாளெடுத்துப் போகிறாய்.
  போர் காணப் போ எனிலோ
  புல்லெடுத்துச் செல்கிறாய்!

- வெட்டியாய் நாள் கடத்தி
  வீதி சுற்றித் திரிகிறாய்.
  சுட்டிக் காட்டிப் போதித்தால்
  சுடுநெருப்பாய் எரிகிறாய்!

- தாய் தந்தை தகு நட்பு
  தக்கோர் சொல் வெறுக்கிறாய்.
  நோய்ப்பட்ட மனத்தோடு
  நொடிதோறும் அலைகிறாய்!

- தங்கமெது தகரமெது
  தரங்காண மறுக்கிறாய்.
  தங்கிச் சென்ற நிழல் மறந்து
  தலை கனத்து நடக்கிறாய்!

- விதிப் பயனே வாழ்க்கையென
  வீண் பொழுது கழிக்கிறாய்.
  மதியிழந்து மானமற்று
  மண் புரண்டு துடிக்கிறாய்!

**- ஆர். தமிழ்மகன்,**
கோயம்புத்தூர்.

# தமிழை விழுதுகளாய் தாங்குவோம்!

அன்போரே! ஆன்றோரே தமிழாளும்!–எம்மினிய
அன்புக்கவி ஊற்றான நெஞ்சத்தாரே!
வண்டாடும் மாலைமலர்ச் சோலையென!–குழுமிய
வண்டமிழ் தங்கத்தின் கவியேர்களே!
தண்டாடும் தாமரையின் கொடியெனவே!–ஏனோ
தள்ளாடும் நிலையின்னும் குறையவில்லையே!
தண்ணிறைவு வளமாளும் செம்மொழியாள்!–தமிழை
தாங்கிடவே தமிழர்நாம் ஒன்றுசேர்வோம்!

களவுகொலை காதல்காமம் நிலையறியாமல்!–சமூகம்
கண்கெட்டு போகும்நிலை நாமறிவோமே!
இல்லையா? இதற்குதீர்வு என்றாய்ந்தாலோ–மாணவரின்
இளமையின் கல்விமுறை மாறவேணுமே!
தொல்லையான ஆங்கிலவழி பாடமுறையால்!–ஆசிரியர்
துன்பப்பட்டு ஏற்கும்சிரத்தை மாற்றவேணுமே!
பிள்ளையா அவன்?எந்தன் பெட்டகமே!–எனக்கூறும்
போற்றுகின்ற பெற்றோரும் மகிழவேணுமே!

புவியெங்கும் தமிழாய்ந்து அறம்சேர்க்கிறார்!–அன்னை
பிறந்திட்ட நம்மண்ணில் அரமாகிறார்!
கவிபாடும் நெஞ்சத்தார் குழுவாகிறார்!–அங்கே
கண்ணிரு இமையெனவே தமிழ்க்காக்கிறார்!
அவித்திட்ட பருப்பெனவே ஆகிவிட்டோம்!–இங்கே
ஆருடங்கள் பார்த்ததெலாம் போதுமய்யா!
தவிக்கிறது பகுத்தறிவு; களையெடுக்க!–தலைமை
தாங்குவது தமிழர்தானே! முன்னெடுப்போம்!

ஆரம்பத் தொடக்கக்கல்வி மாணவர்க்கு!–பயிற்றும்
ஆங்கிலவழி தவிர்த்திடவே வேண்டிடுவோம்!
வீரம்சார்ந்த தன்மானக் கதைகளையே!–அவர்க்கு
விளையாட்டுடன் போதிக்கவே கோரிடுவோம்!
அறம்ஈனும் அன்புஈனும் தர்மங்களையே!–பாடமாய்
அழகுதமிழில் வாசித்திடவே கேட்டிடுவோம்!
இறைநெறி இயற்கைஐம் பூதங்களையே!–தொழுதிட
இசைத்தமிழில் நெறிப்படுத்தவே வேண்டிடுவோம்!

தமிழ்மொழி வரலாறுதன் வரலாறெனவே–காணும்
தலைநிமிர்வு சமுதாயம் தோன்றும்!
கமழ்ந்திடும் அன்புபாசம் மனிதநேயம்!–பெரியாரின்
கனவுநிறை சமத்துவம் மேலோங்கும்!
குமைந்திடும் கோழைகளோ கழுதைமீது!–ஏறும்
குரங்காட்டம் போட்டோடும் அந்நியமாகும்!
அமைந்திடவே இதுவெலாம் ஆதுமென்றாலே!–தோழமையே
அன்னைதமிழை விழுதுகளாய் தாங்குவோம்!

- புங்கத்தூர் **அ. கண்ணதாசன்,** திருவள்ளூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல் அறிவோம் ! 31

## "சும்"

'சும்' என்பதற்கு ஒன்றுமில்லை, சாதாரண, எளிய, வெறுமனே என்பன பொருளாகும். 'சும்' மை அடி நிலையாகக் கொண்டு தோன்றும் சொற்களை இங்குக் கண்ணுறுவோம்.

1. சும்மா = ஒன்றுமில்லை, வெறுமனே என்பன சும்மா ஆயிற்று.
2. சுமார் = சாதாரணமான, எளிய என்பன சுமார் ஆயிற்று.
3. சும்மாடு = தலையில் ஏற்றும் பாரத்தை எளிமைப்படுத்த சாதாரணமானதாக ஆக்க துணிச்சுற்றைத் தலையில் வைத்துக் கொள்வது சும்மாடு ஆயிற்று.
4. சோம்பல் = சுறுசுறுப்பின்றித் தனிமையில் முடங்கிக் கிடப்பது சோம்பல் ஆயிற்று.
5. சோம்பேறி = சுறுசுறுப்பின்றி, வெறுமனே தனிமையில் ஒதுங்கி இருப்பவன் சோம்பேறி ஆனான்.
6. சாம்பல் = எரிந்து போன மிச்ச மீதி உள்ள கழிவுப் பொருள் சாம்பல் ஆயிற்று.
7. சூம்புதல் = விளைச்சல் இல்லாத செடி - பயிர் சூம்புதல் ஆயிற்று.
8. சுமை = எளிமை இல்லாத - அதிகக் கனம் மிக்க - சும்மா என்பதன் எதிர்ச்சொல்லாக வருவது சுமை ஆயிற்று.
9. சோமாரி = வேலை இல்லாத வெட்டி ஆள் சோமாரி ஆனான்.

## 1. மாறுபாடு - வேறுபாடு

### 1. மாறுபாடு

மாறுபாடு என்பது மறக்கப்பட வேண்டியது, வெறுக்கப்பட வேண்டியது; ஒதுக்கப்பட வேண்டியது; புறக்கணிக்கப்பட வேண்டியது; தள்ளக் கூடியது; மொத்தத்தில் இச்சொல் முரண்பாடானது ஆகும். உதாரணமாக

1. பாலில் பாலிட்டால் கலப்பது X தவறு
2. எண்ணெயில் தண்ணீர் கலப்பது X தவறு
3. மலத்தில் உணவைக் கலப்பது X தவறு
4. அரிசியில் அரிசி போன்ற கல் கலப்பது X தவறு
5. வலது காலையும், இடது கையையும் வெட்டுவது X தவறு
6. உணவில் நஞ்சு கலப்பது X தவறு

('நாடோடி மன்னன்' படத்தில் ம.கோ.ரா. M.G.R.என்னும் மாறுகால் - மாறுகை வெட்டப்படுவார். இது மிகமிகக் கடுமையான, கெடுமையான, கொடுமையான தண்டனை ஆகும்.)

இன்னும் இன்னும் அதிகமாக அடுக்கிக் கொண்டே செல்லலாம். இட நெருக்கடிக் கருதி இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

### 2. வேறுபாடு

வேறுபாடு என்பது ஒருவருக்கு ஒருவர் அனுசரித்தும், ஒத்தும், இணைந்தும், சேர்ந்தும் செல்வது ஆகும். இஃது உடன்பாடான செய்தியாகும். உதாரணமாக

1. பாலில் தண்ணீர் கலப்பது ✓சரி
2. மோரில் உப்பு, காயம், தண்ணீர் இன்னும் பல கலக்கலாம். ✓ சரி
3. இன்ப நிலா என்ற பெண் இன்று இட்டளி சாப்பிடலாம். மறுநாள் தோசை, உப்புமா, சுண்டல் சாப்பிடலாம். ✓சரி
4. கணவனுக்கும், மனைவிக்கும் கருத்து வேறுபாடு ஏற்படலாம். ✓சரி
5. ஒருவன் கணக்கிலும், மற்றவன் தமிழிலும் அதிக மதிப்பெண் எடுக்கலாம். மறுநிலையில் கணக்கு மாணவன் தமிழிலும், தமிழ் மாணவன் கணக்கிலும் அதிக மதிப்பெண் எடுக்கலாம். ✓சரி
6. வெளியூர் செல்ல விரும்பும் ஒருவர் தொடர் வண்டியில் செல்லலாம். மற்றவர் பேருந்தில் செல்லலாம். இன்னுமொருவர் கப்பலிலும் செல்லலாம்; விமானத்திலும் பறக்கலாம். ✓ சரி
7. அண்ணன் வழக்கறிஞராக இருக்கலாம்; தம்பி ஆசிரியராக இருக்கலாம். ✓சரி
8. மூத்த மகள் மயிலாடுதுறையில் வாழலாம்; இளைய மகள் தஞ்சாவூரில் வாழலாம். ✓ சரி

இன்னும் இன்னும் அதிகமாக அடுக்கிக் கொண்டே போகலாம். இட நெருக்கடிக் கருதி இத்துடன் முடித்துக் கொள்கிறேன். ■

சொல்லாய்வுச் செம்மல்
**வய்.மு. கும்பலிங்கன்,**
கும்பகோணம்–1.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மொட்டை மாடியில் ரோசாப்பூ!

■ தூளி விளையாடிய
கிளைகள் எங்கே காணோம்?
குயில்களின் குரலும்
காணவில்லை...

■ காற்றுத் தீண்டலில்
சலசலவென வருடும் இசையை
திருடிச் சென்றவன் யாரோ?

■ சுறுசுறுப்பாய்த் திரியும்
மரங்கொத்தி எங்கே போனது?
துள்ளித் துள்ளி விளையாடும்
அணில் பிள்ளை சத்தம்
கேட்கவில்லை.

■ அந்த இலைகளுக்குள் அமர்ந்து
ஊரையே விரட்டிய மூக்காயி பேயும்
இன்னும் வரவில்லை.

■ சூரியன் சுடும் போது
தாய்மடி நானிருக்கேன் என்று
அழைக்கும் நிழலும் எங்கே?
வளர்ந்து நின்ற மரம் எங்கே?

■ மொட்டை மாடியில் ரோசாப்பூ
மலர்ந்து நிற்கின்றது!

- முனைவர் **சாசேராஜா**,
கச்சைகட்டி, மதுரை.

## அவலங்களும் தவறுகளும்

● பண்பாட்டு விழுமம்
சுடுகாட்டுப் பிணமாய் எரிகிறது.

● சின்னஞ்சிறு சிட்டுக்கள்
சித்ரவதைப்பட்டு
சின்னா பின்னமாகின்றன.

● பொல்லாத மனித விலங்குகளின்
சல்லாப பாலியல் வன்முறை
சொல்ல முடியாத அளவு!

● போலித் துறவிகளோ
காவிப் பட்டம் போய் காலிப் பட்டம்
ஏந்துகின்றனர்.

● பணம் படைத்தோர்
வங்கிப் பணத்தைக் கோடிக்கணக்கில்
கடன் வாங்கிவிட்டு விமானமேறிப்
பறக்கிறார்கள் வெளிநாட்டிற்கு!

● சில்லறைக் கடனாளி
சிக்கித் தவிக்கிறான் ஜப்தியில் மாட்டி
கோயில் கருவறைகள்
காமக் கழிவறைகளாகின்றன.

● சிலைகளோ கோடிப் பணத்திற்கு
ஓடி ஒளிகின்றன வெளிநாட்டில்.

● ஓட்டுப் போட்டவன்
வாட்டம் போக்க நாதியில்லை
இங்கு!

-புலவர் **ந. ஞானசேகரன்**,திருலோக்கி.

## மனைக்கல்வி தலைகுனிவு!

○ என் தேசத்தின்
கல்வி அழகுக் கண்டு
பெருமையுடன் தலைகுனிந்து
நிற்கிறேன்.

○ ஆசிரியர்
கற்றுத் தந்தார்
அழகாக மனப்பாடம்.

○ பாசம் அவ்வளவு பாசம்
பள்ளி முதல்வர்கள் மேல்.

○ அவர்கள் வாழ
பணத்தை அள்ளித் தருகிறார்கள்
பெற்றோர்கள்.

○ தூக்கமின்றி விடுமுறையின்றி
படித்தது புரியாமல்
மனனம் செய்து
பெற்ற முதல் மதிப்பெண்
கல்லூரியில் வாங்கித் தந்த பரிசு
முட்டாள்.

○ என் தேசத்தின்
கல்வி அழகு
பெருமையான தலைகுனிவு!

- **சுபா**, காந்தி கிராமிய பல்கலைக் கழகம், திண்டுக்கல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர் புகழஞ்சலி!

- தளவை இளங்குமரன், தளவாய்புரம், திருநெல்வேலி.

அஞ்சுகத்தாய் முத்துவேலர்
அன்புப் புதல்வர் கலைஞர்!
அனைத்துலகத் தமிழர்களின்
அருமைத் தலைவர் கலைஞர்!
நெஞ்சகத்தே நிரந்தரமாய்
நிலைத்த முதல்வர் கலைஞர்!
நேசத்தோடு பாசத்தையும்
நிறைத்த புனிதர் கலைஞர்!

வண்ணத்திரை வரலாற்றின்
வானைத் தொட்டவர் கலைஞர்!
வசனம் கதை பாடல்களின்
வசந்த காலம் கலைஞர்!
மண்ணில் நம்மை உடன்பிறப்பாய்
மதித்தவர் நம் கலைஞர்!
மாணவர்க்குள் பாவேந்தர் 'பா'
மணக்க வைத்தார் கலைஞர்!

துஞ்சிடாமல் சாதிமதம்
தொலைய உழைத்த பெரியார்
தொண்டினுக்குத் தோள்கொடுத்த
தொண்டர் நமது கலைஞர்!
பிஞ்சுள்ளத்துப் பேரறிஞப்
பெருந்தகையர் இதயப்
பீடம்தன்னில் இடம்பிடித்த
பெருமைத்தம்பி கலைஞர்!



கடமையுடன் கண்ணியத்தைக்
கண்ணிமையாய்க் கருதிக்
கட்டுப்பாடாய்க் காத்து வந்த
காவலர் நம் கலைஞர்!
குடும்பச்சொத்தில் சமவுரிமை
கோதையரும் பெறவே
கொண்டுவந்தார் சட்டமதைக்
கொற்றவர் நம் கலைஞர்!

சென்னையிலே வள்ளுவர்க்குச்
சிகரக் கோட்டம் நிறுவிச்
செம்மொழியாய் நம்தமிழை
சிறக்க வைத்த கலைஞர்!
தென்குமரிக் கடலில்அய்யன்
திருச்சிலையின் உருவைத்
திரும்பிப் பார்த்து இமயமலையும்
திகைக்க வைத்த கலைஞர்!

எண்ணமெல்லாம் தமிழர்களின்
ஏற்றமொன்றே குறியாய்
இயங்கிவந்த இனமான
எழுச்சிவேந்தர் கலைஞர்!
புண்ணையெல்லாம் பூவாய்ஏற்ற
புறநானூற்று மறவர்
புறமுதுகு காட்டிடாத
போர்வீரர் நம் கலைஞர்!

பொன்னர்சங்கர் கதையை ஏடு
புகழ வைத்த கலைஞர்!
பூம்புகாரைச் சீர்திருத்திப்
பொலிய வைத்த கலைஞர்!
பொன்னெழுத்தில் 'குறளோவியம்'
பொறித்தவர் நம் கலைஞர்!
புரட்சிமிகு 'தொல்காப்பிய'ப்
பூங்கா தந்தவர் கலைஞர்!

காலவெள்ளம் அழித்திடாத
காவியம் நம் கலைஞர்!
காற்றும்மழையும் அணைத்திடாத
கலங்கரை நம் கலைஞர்!
ஞாலம்உள்ள வரைக்கும்நாளும்
ஞாயிறுபோல் கலைஞர்!
நாற்றிசையும் வழுத்த வாழ்வார்
நமது புகழ்க் கலைஞர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வானொலிகளில் இந்தி மொழி திணிப்பு!



**சீதா கலியபெருமாள்,**
வானொலி நேயர், காரைக்கால்.

நம் நாட்டில் தொழிலாளியின் தோழமையாகவும் நல்ல நல்ல இசையைக் கேட்டும் இன்பங்கள் பெற்றும் இதயவலி உள்ளவர்களும் கூட வானொலி கேட்பதினால் சுகம் பெறுவார்கள். அது மட்டுமின்றி சில நேரங்களில் தனக்குப் பிடித்தவாறும் அந்தந்த சூழ்நிலைக்குத் தக்கவாறும் ஒவ்வொரு நேயர்களும் தனக்குத் தெரிந்த சமையல் குறிப்புகள், மருத்துவக் குறிப்புகள், அழகுக் குறிப்புகள், குழந்தைகள் வளர்க்கும் விதங்கள் மேலும் குழந்தைகளும் பங்கேற்று திருக்குறள் பாடல்கள், சிறுகதைகள், விடுகதைகள், ஆத்திச்சூடி என மழலைகள் பேசும் அந்தப் பிஞ்சுக் குரல்களில் கேட்கும் போது ஆசையுடன் கலந்த ஆனந்தமும் கூடும்.

நெசவுத் தொழிலாளிகள், தையல்காரர்கள், பூக்கட்டுபவர்கள் இன்னும் சொல்ல வேண்டுமென்றால் பேருந்து, மகிழுந்து, உழுவுந்து தொழில் நுட்ப வாகனம், வயல் வெளியில் வேலை செய்பவர்கள் வயலுக்கே வானொலிப் பெட்டியை எடுத்துக் கொண்டு போய் வரப்பின் மீதும், மரத்தின் அருகிலும் வைத்து அதில் வரும் நல்ல நல்ல கருத்துகளையும் பாடல்களையும் கதைகள், குறிப்புகள் என வானொலி கேட்டுக் கொண்டே வீண் பேச்சுக்கு இடம் தராமல் சந்தோசமாக கூலி வேலையை செய்வோர்கள் ஏராளம்.

வானொலி என்பது தனிமைக்கு விருந்தாளியாகவும் தோழியாய், தோழனாய், தாயாய், தந்தையாய், சகோதரனாய், சகோதரியாய், குழந்தையாய், முதியோராய், மருத்துவராய், பாடகராய், பாடகியாய், கவிஞராய், நாடக மேடையாய் இப்படி இன்னும் எத்தனை விழிப்புணர்வுகள் ஊட்டும் விதத்தில் உதவியாக இருந்து வருகிறது.

மேலே குறிப்பிட்டது போல அத்தனையும் (தாய்த் தமிழில்) தாய்த் தமிழ் மொழியில் வருவதால் எல்லோருக்கும் புரியும் வகையில் இருந்து வந்தது. ஏழை மக்கள் கேட்கும் வானொலியில் இந்தி என்றால் என்ன புரியும்? எத்தனை பேர்கள் கேட்பார்கள்? இதற்காக வேலையை போட்டுவிட்டு இந்தி கற்றுக் கொள்ள முடியுமா?

வயிற்றுப் பிழைப்புக்கு என்ன பண்ணுவது? குடும்பப் பிரச்சனைகள் எப்படி சமாளிப்பது? படிப்பே இல்லாதவர்கள் உணவுக்கும் உடைகளுக்கும் பாடுபட்டு வரும் இந்த நிலையில் இது என்னவோ ஓடுது ரேடியாவ நிப்பாட்டு என்று சொல்லும் விதத்தில் வானொலியில் இப்போதெல்லாம் அடிக்கடி இந்தி நிகழ்ச்சி போடுவதால் இந்தி மொழி என்பது தமிழர்களுக்கு பலருக்கும் எங்கே தான் புரியுது? உடனே நிறுத்தி விடுகிறார்களே தவிர கேட்பதில்லை. அப்படிப்பட்ட உரையாடல் தமிழ் மக்களுக்குத் தேவையுமில்லை. தமிழ் ஒலிபரப்பு நேரத்தைத் தட்டிப் பறிப்பதை ஏற்கவும் இயலாது.

## ஆசிரியர் தொகுதி

கஜா புயலில்சிக்கி சின்னாபின்னமாகி மக்கள் வாழ்வாதாரத்தை இழந்து, வீடிழந்து தெருவில் நிற்கிறார்கள். 16-11-18 முதல் 30-11-18 வரையிலும் அரசு எவ்வித நிவாரண நிதியும் வழங்காதிருப்பது பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது. கடைக்கோடி தமிழனுக்கும் தனியார் அமைப்புகளும், தொண்டு நிறுவனங்களும், ஒரு சில கட்சிகளும், மனிதநேயமிக்கவர்களுமே உதவி வருகிறார்கள். மத்திய, மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசகர் வட்டம்

### காரசாரம்!

❑ வணக்கம். ஏழைதாசன் கிடைத்தது. படித்தேன். தமிழ்... முதல் பக்கம் படித்தேன். நான் மியான்மர் தமிழர் அறநெறிக் கழகம் பக்கம் தமிழ்தான் மூத்த மொழி. இதில் எள்ளளவும் சந்தேகம் எனக்கில்லை. கவிதைகள் மிகவும் அருமை. 'கொடுமை உனக்கில்லை' கவிதையில் புதுச்சேரி கவிஞரின் கோபம் தெரிந்தது. அக்கினிக் கணைகளாய் தெறித்து விட்டார். அருமை. தமிழன் பெயர் 2035 இல் எப்படி இருக்கும்? உண்மையைத்தான் எழுதியுள்ளார். மொத்தத்தில் ஏழைதாசன் 'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' என்பது போல் காரசாரமாக இருந்தது. இந்தக் கருத்துக்கள் கண்டிப்பாக மக்களைச் சென்று சேர வேண்டும் என்பதே என் கருத்தும். தொடரட்டும் தங்களின் தமிழ்ப்பணி. வாழ்த்துக்கள்.

– **ஞா. சிவகாமி,** போரூர், சென்னை.

### கற்கண்டுகள்!

❑ கலாவிசுவின் 'கொடுமை உனக்கில்லை!' என்ற கவிதையின் மூலம் பெண்ணா பிறந்தால் ஏற்படும் கஷ்டங்களை எடுத்துக்காட்டி விளங்க வைத்ததும் பாராட்டத்தக்கது. பாவலர் தமிழவனின் வாழ்க்கை வசப்படும்! கவிதை, சமாதானப் புறா நேரு, மகன் வாழ்வு, தோள் கொடு தோழா, தனிமை, வருத்தம், விவசாயி, வா வாழ்ந்து காட்டலாம், கலைஞர் வாழியவே, மழைத்துளி, தீயினில் தூசு, மற்றக் கவிதைகளும் இதழுக்குப் பெருமை சேர்த்து இன்பத்தை அளித்த கவிதைகள்! கற்கண்டுகள்! வல்லம் தாஜுபாலின் 'காற்றிலும் அணையாக் கருணைச் சுடர்' – கட்டுரை மிகவும் மனதுக்கு இனிமையானக் கட்டுரையாக மலர்ந்து மனதை மயக்கியது பாராட்டுக்கள்.

– கவியருவி **ஆர்.கே. மதியழகன்,**
கரடிப்பட்டி, நாமக்கல்.

### ஏழைதாசனே!

❑ பலரின் எண்ணங்களைக்
கவிதைகளாக –
உன்னுள் புதைத்து
எத்தனையோ பேர்களை
விருதுகள் பெறச் செய்துவரும்
உன் தொண்டு மகத்தானது!
நீ வாழ்க!
வளர்க உன் புகழ்!
என்னைக் கவர்ந்த
ஏழைதாசனே!

– **பத்மாவதி கிருஷ்ணசாமி,**
கீழசோத்திரியம், திருவாரூர்.

### பீடு நடை!

❑ சொல்லாய்வுச் செம்மல் வய்.மு. கும்பலிங்கன் அவர்களின் 'சொல் அறிவோம்' பகுதி படித்துப் பயன் பெறும் வகையில் அரிய செய்திகளை அறிய உதவும் முறையில் சிறப்பாகவே திகழ்கிறது. வாசிக்கும் தமிழ் இதயம் மகிழ்கிறது. அறியப்படாததை தெரியப்படுத்தியிருக்கும் உத்தி பாராட்டுக்குரியது. வாடாத வாழ்த்துக்கள். மேலும் ஏழைதாசன் 27வது ஆண்டில் கால் பதித்து பீடு நடை போடுவது மகிழ்ச்சிக்குரிய செய்தி. ஏழைதாசன் மேலும் மேலும் மேன்மை கொண்டு தொலையாப் புகழ் பெற தொடரட்டும் தங்களது இலக்கியப் பணி.

– கவிச்சுடர் **இளங்கதிரவன்,**
கோயம்புத்தூர்-30.

### தமிழ் அழிப்பு!

❑ சீனி வேங்கடசாமியின் தமிழைத் தாழ்வு படுத்தும் கட்டுரைக்கு கண்டனம் தெரிவித்துள்ள மியான்மர் தமிழர்களை உளமாறப் பாராட்டுகிறேன். மழை மேகங்கள் பற்றிய கவிஞர் மித்ராவின் எழுத்தோட்டத்தில் சங்ககால இலக்கியமும் அய்க்கூவும் பரிணமித்துப் பல கருத்துக்களை உணர்த்தின. தமிழில் பெயரிட வேண்டும் என்று ஓர் இயக்கம் தொடங்க வேண்டும் என்னும் திருவிடச் செல்வனின் கருத்தை செயல்படுத்தாவிட்டால் பெயர்களாலேயே தமிழை அழித்து விடுவார்கள்.

– புலவர் **ந. ஞானசேகரன்,**
திருலோக்கி, தஞ்சை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரியாப்பட்டினத்தில் பாரம்பரிய
## கைராசி ஐவுளிக்கடை



❑ வேட்டி ❑ துண்டு
❑ ஜட்டி ❑ பனியன் ❑ கைலி
❑ தையல் பொருட்கள்

# ஸ்ரீராம் டெக்ஸ்

பேச : 87785 55084

சாருமடை கடைத் தெரு, கரியாப்பட்டினம்,
வேதாரண்யம் வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.



தமிழ்ப் பாரம்பரிய சித்த மருத்துவ பாதுகாப்பு இயக்க மகளிரணி செயலர் மூலம் ❑ புற்று நோய்க்கு மருந்தாகும் முள் சீதா கன்று ❑ மாரடைப்பு, மூட்டுவலிக்கான மரப் போத்து ❑ சர்க்கரைப் புண்ணுக்கு கட்டும் மூலிகை பெறலாம்.

## பெண்கள் மருவுக்கு

ஒரே வேளை மூலிகை உப்பு வைத்து தினசரி ரூ. 1000 சம்பாதித்திட



பேச : 96000 36959



● பெண்கள் வலி, வாதத்துக்கு
வர்ம தைல தடவு செய்து தினசரி ரூ. 1000 சம்பாதித்திட

பேச : 95004 72837

கற்கள் நோய் கையேடு பெற
5 ரூ ஸ்டாம்புகள் 2 சிறப்பாசிரியர்
முகவரிக்கு அனுப்புங்கள்.





ஆண்களின் பக்கவாதத்துக்கு
வர்ம தைல தடவு செய்திட
இலவச வர்ம வைத்திய பயிற்சி
பெற்று தினசரி ரூ. 1000
சம்பாதித்திட
பேச : 96558 88319

ஆண்களின் மூட்டுவலிகளுக்கு
வர்ம தைல தடவு செய்திட
பேச : 95244 32679





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்த மருத்துவ வரலாறு படிப்போம்!
## சித்த மருத்துவ வரலாறு படைப்போம்!!



பண்டிட்
**பெ.முத்துக்கருப்பப் பிள்ளை**

ஸ்தாபிதம்
(நிறுவி பதிவு பெற்றது)



மருத்துவரேறு
**பெ.மு. இராசகோபாலன்**

# சித்த மருத்துவக் குருகுலம்

(அஞ்சல் வழி பயிற்சி நிறுவனம்)



மரு. **இரா. முத்தரசன்,**

M.A.,MBA., Ph.D., DSMS, DYNS, DTE,RMP(S.A.), SMP.,

இயக்குனர்: சித்த மருத்துவக் குருகுலம், மதுரை.

89/23-B, T.P.K. ரோடு, பைக்கரா, மதுரை - 625 004.

**போன் : 0452-2370632, 94871-45729, 97865-30418**

# செண்பகம் மெடிக்கல்ஸ்

(இன்காப்ஸ் ஸ்டாக்கிஸ்ட்)

முன்னணி கம்பெனிகளின் சித்தா, ஆயுர்வேத, யுனானி மருந்துகள் மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

---

35-A, அரிசிக்கார சந்து, நன்மைதருவார் கோவில் தெரு,

மதுரை - 625 001. செல்: **94871- 45729, 97865-30418**

---

மரு. **இரா.முத்தரசன்,** M.A.,MBA., Ph.D., DSMS, DYNS, DTE,RMP(S.A.), SMP.,

மரு. **மு.பத்மாவதி,** M.A.,B.Ed.,RSMP,SMP.,



**விரைவில் மாதந்தோறும் 2 நாட்கள் சித்த மருந்துகள் செய்முறைப் பயிற்சி மீண்டும் நடைபெற உள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரோடு இனியாவின்
## அய்க்கூ கவிதைகள்...

- முதலமைச்சர் பதவிக்குப்
பயிற்சி இலவசம் –
நடிகர் சங்கம்!

- அவங்கெடக்கரான் குடிகாரன்
நீ எனக்கு ஊத்து
ஒரு நூறு மில்லி!

- குழந்தையின் பால் காசில்
நடிகரின் போஸ்டருக்குப்
பாலாபிஷேகம்!

- ஊழல் சம்பாத்தியம்
அடுத்த தேர்தலில்
வெற்றி நிச்சயம்!

- விதவிதமான சரக்கு
வேண்டுமா?
ஜெயிலுக்குப் போ!



- கஞ்சன் தேனிலவு
காஷ்மீருக்கு –
தனியாக!

- சாராய வியாபாரி
கல்வித் தந்தையானால்
சாராயக் கடையே போதிமரம்!

- இருபது ரூபாய் நோட்டு
இருந்தால் போதும்
ஜனநாயகத்துக்கு வேட்டு!

- பெண்கள் முன்னேறப்
பெரிய 'திரை'
சின்னத்திரை!

- மதுவிலக்கு ஊர்வலம்
முடிந்தது
டாஸ்மாக்கில்!

செல்லம் பாலா
## துளிப்பாக்கள்...

- ஒற்றைக் கூழாங்கல்
ஒளிர்கிறது வண்ணமாய்
மகளின் கைவண்ணம்!

- மெல்ல மெல்ல
உடையும் இரவின் மௌனம்
கொக்கரக்கோ!

- வந்த கோபம்
தந்து விட்டுப் போனது
பெருத்த நட்டம்!



- தாழ்வான பகுதிகள்
பலத்த எச்சரிக்கை
மேடேறும் நண்டு!

- மனதின் நெகிழ்வு
திரும்பிப் பார்க்க வைக்கிறது
எங்கள் பள்ளி!

- இழுத்துப் போர்த்திய
சேலைத் தலைப்போடு அவள்
ஈரக் காற்று!

- பசியாற்றுகிறது
ஒரு கோப்பைத் தேநீர்
நட்பின் வருகை!

- ஈரம் செறிந்துள்ளது
விரைந்து வீடு சேரணும்
வாடைக் காற்று!

- மண்ணின் தேன் தலை
மகிழும் வண்ணத்துப் பூச்சிகள்
புதுநெல் வெடித்து!

- அமாவாசை
வரவில்லை காகங்கள்
தாமதப் படையல்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியக் கட்டுரை :

# உன் குறையும் உன்னிடம் குறையும்

- வல்லம் தாஜுபால், தஞ்சாவூர்-4.

இலக்கியம் நம்மை மென்மைப்படுத்தும் மேன்மைப்படுத்தும் கண்ணாடி. இரு வகையில் பயன் தரும். உள்ளதை உள்ளபடி காட்டும். சீர்படுத்திக் கொள்ள உதவும். இலக்கியமும் சமூக நிலையைக் காட்டும் தன்னைச் சீர்செய்து கொள்ள உதவும். அதனால்தான் 'இலக்கியம் காலக் கண்ணாடி' என்கிறார்கள்.

இலக்கியம் வாழ்வுக்கு வரி வடிவம் தரும். உணர்வுகளுக்கு எழுத்துருவம் தரும். மொழியைப் புதுப்பிக்கும். நம்பிக்கை நதி வற்றி விடாமல் ஊற்றுகளை உற்பத்தி செய்து கொண்டே இருக்கும். இலக்கியம் சோறு போடுமா என்பார்கள். இலக்கியம் சோறு போடாது. ஆனால் பசியைத் தூண்டும்.

உரைநடைக்கும் கவிதைக்கும் என்ன வித்தியாசம்? வார்த்தைகள் நடந்தால் உரைநடை. நடனமாடினால் கவிதை. 'காலம் காலமாக கவிஞர்கள் காதலைப் பாடிக்கொண்டே இருக்கிறார்கள்' என்பது உரைநடை. 'காதலைப் பாடாத கவிஞன் இல்லை. காதலைப் பாடாதவன் கவிஞனே இல்லை' என்பது கவிதை.

இதே பாணியில் இரா. காசிநாதன் தன் 'காகிதத்தில் ஒரு கல்வெட்டு' நூலில் சில தெறிப்புகள் உள்ளன. உறங்காத உயிரில்லை. உறங்கிக் கொண்டே இருந்தால் அது உயிரில்லை'. 'உதவாதது எதுவும் உன்னிடம் வேண்டாம். உதவாவிட்டால் நீ உலகிற்கு வேண்டாம்'.

உரைநடையைவிட கவிதையில் வார்த்தை குறைவு வேண்டும். உரைநடை கறந்த பால் என்றால் கவிதை சுண்டக் காச்சிய பால். வார்த்தைகள் சுருங்க சுருங்க கவிதை கூர்மை அடையும். கவிதையை உரைநடையிலிருந்து வேறுபடுத்துவது கவிதையில் கையாளப்படும் சிலேடை அணி போன்றவைதாம்.

'கோதை ஆண்டாள் தமிழை ஆண்டாள்' - இதில் ஆண்டாள் சிலேடை.

உதிரம் உறிஞ்சிக் கொழுத்தவர் படம் அந்த இதழின் அட்டையில் / அவரைப் பற்றி அறிந்தவன் சொன்னான் / அட்டையில் ஓர் அட்டை - இதில் அட்டை சிலேடை.

காசிநாதனின் சிலேடைகள் 'எந்த முடியும் உன்னால் தொட முடியும் / உதிக்கும் சூரியன் உச்சிக்கு வந்தே தீரும்'. சோம்பிக் கிடந்தால் சுமைகள் எப்படி தீரும்? / மரம் வை அதற்கு மனம் வை / ஏர்க் களத்தில் விதைப்பது விளையும் போர்க் களத்தில் விபரீதம் விளையும் / எழுந்திரு பிரச்சனைகளைத் தீர்க்க சில பித்தர்களைத் தீர்க்க / அமைதியாய் யோசி. உன் குறையும் உனக்குள் குறையும். ■


கூடுவிட்டு கூடு பாயும் குறுந்தகவல் (SMS) சஞ்சிகை !

இனியா

குறுஞ்செய்தி இதழ்

இப்போது வாட்ஸ்-அப், முகநூலில்...# 97 90 40 70 68, 94 42 77 68 68.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டைப்படக் கட்டுரை :

# மூலிகை நெறிமுறை! ஆறாம் தலைமுறை!



திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டியில் புகழ்பெற்ற வைத்தியர் அமரர் சதா பாலசுப்பிரமணியம் (ஏழைதாசன் முகப்பு அட்டையில் இடம் பெற்றவர்)-ஆனந்தவள்ளி பெற்றோர்க்கு 03-07-1967 அன்று திருமகனாகப் பிறந்தார் பா. இரவீந்திரன் அவர்கள்.

இவர் வரலாறில் முதுகலைப் பட்டமும், வேதியியலில் இளங்கலைப் பட்டமும் பெற்றவராவார். தொடர்ந்து தந்தையைப் போன்று சித்த மருத்துவத்தில் ஆர்வம் கொண்டு இ.எஸ்.எம்.பி. சான்றிதழ் பெற்று சிறப்பாக மருத்துவம் செய்து வருகிறார்.

அதாவது ஒரு பெரும் பாரம்பரியமாக ஆறாவது தலைமுறையாக இவர் சித்த மருத்துவம் பார்த்து வருகிறார்.

நாள்பட்ட புற்றுநோய், தோல் நோய் இவைகளுக்கு 7 நாட்களில் குணப்படுத்துகிறார்.

இராமபான இடி மருந்து, சடாச்சர பூபதி, நவபாஷாண செந்தூரம், கனகலிங்க மெழுகு, நவலோக செந்தூரம் இவைகள் சிறப்பு அனுபவ மருந்துகளாகும்.

ஆஸ்துமா நோய் ஐந்து நாட்களிலும், தோல் நோய்களுக்கு 5 நாட்களிலும் சர்க்கரை நோய்க்கு 48 நாட்கள் (ஒரு மண்டலம்) 96 வேளைகளில் குணப்படுத்தி வருகிறார்.

தமிழ்நாடு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவ மாநிலத் தலைவராக உள்ளார்.

ஆண்டு தோறும் சித்ரா பௌர்ணமி அன்று முத்துப்பேட்டைச் சாலை காருகுடி சித்தர் சமாதியில் இலவச சித்த மருத்துவ முகாம், பட்டிமன்றங்கள், இலவச வர்ம வைத்திய பயிற்சிகள் நடத்தி வருகிறார்.

சர்க்கரை நோய் மருந்தானது 7 நாட்களில் எரிச்சலையும், 143 நாட்கள் சாப்பிடும் போது தோல் வறட்சியை குணமாக்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு ஆங்கில மாதமும் நான்காவது சனிக் கிழமை திருத்துறைப்பூண்டி 6ம் தேதி மற்றும் எல்.ஐ.சி. அலுவலகம் எதிரில் உள்ள எம்.வி.கே. பிரவீன் டவர்ஸ் இரண்டாவது மாடியில் காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை பிரபல சித்த வைத்தியர்கள் கூட்டத்தில் பங்கு பெற்று வருகிறார்கள்.

கலைஞர் மு. கருணாநிதி எழுதிய நெஞ்சுக்கு நீதி முதல் பாகத்தில் ஆஸ்பத்திரியே அசைந்து வருவது போல் மருத்துவ நிலையத்தையே மடியில் கட்டிக் கொண்டு திருவாரூர் தேர் மாதிரி வருவாரே... காருகுடி சுப்பையா வைத்தியர் ... அவர் எங்கே இப்போது ? என குறிப்பிட்டுள்ளார்.

பெங்களூர் ஜாலகல்லியில் மருத்துவம் செய்ய பயணிக்கிறார். ■


மரு. பா. இரவீந்திரன்,

எம்.ஏ., பி.எஸ்.சி.இ.எஸ்.எம்.பி.,

தலைவர், தமிழ் மாநில சித்த மருத்துவக் கழகம்,

காருகுடி சிவானந்தா சித்த வைத்தியசாலை,

78, ஜவுளிக் கடைத் தெரு,

திருத்துறைப்பூண்டி-614 713,

திருவாரூர் மாவட்டம்.

# 78718 57716, 93603 10008




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்பமான இரவுகள்

- விண்மீன்கள் விழிகாணும் இரவுப் போழ்தில்
  வீசுகின்ற தூய்மையான தென்றல் காற்றில்
  திண்ணையிலே அமர்ந்தபடி தாத்தா பாட்டி
  திருவான வயர்த்தியை மடிய மர்த்திப்
  பண்பாட்டை ஒழுக்கத்தைக் கதையாய்ச் சொல்லிப்
  பதியவைத்த காட்சியெல்லாம் கனவாய்ப் போக
  எண்ணத்தில் மட்டுமந்த திண்ணை நிற்க
  எல்லாமும் மறைந்ததுவே முதியோ ரோடே!

- பால்நிலவின் ஒளிசிந்தும் இரவுப் போழ்தில்
  பயிர்செழித்த பசும்வயல்சூழ் வரப்பின் மீது
  கால்நீட்டி அமர்ந்தபடி குடும்பத் தோடு
  கலகலப்பாய் நிலாச்சோறு உண்ட வாறு
  ஆல்விழுதாய் சுற்றமெல்லாம் கலந்து பேசி
  அன்போடே இருந்தஅந்த காட்சி யெல்லாம்
  கோல்விழுந்த பந்தற்போல் ஆன தோடு
  கொழித்திருந்த வயல்வெளியும் போன தின்று!

- வான்மீன்கள் கண்சிமிட்டும் இரவுப் போழ்தில்
  வளர்ந்திட்டக் களவொழுக்கக் காத லர்கள்
  தேன்சுவையாய் இல்லறத்தைச் சுவைப்ப தற்குத்
  தேள்கொடுக்காய் சாதியன்று தடுக்க வில்லை!
  கூன்மதியால் இன்றுவந்த சாதி யாலே
  கூடியோரைப் பெற்றோரே கொல்லு கின்றார்
  ஏன்இந்த அவலங்கள் எல்லாம் முன்னோர்
  ஏற்றிவைத்த வழிமுறையை மறந்த தாலே!

- பாவலர் **கருமலைத் தமிழாழன்**, ஓசூர், கிருட்டிணகிரி.

## அலைக் கரையில் அமைதி கண்டார்!

அண்ணாவின் அருகிருந்தே உறங்கப் போனார்
அவரென்றும் உறங்காமல் உழைத்தவர் தான்;
செந்நாவில் உதிரும்சொல் அருவியாகிச்
செம்மொழியாய் ஒளிபெற்றுத் திகழ்ந்த திங்கே;
மண்ணாண்ட தலைவரிவர் மக்கள் நெஞ்சில்
மறையாத பேருருவாய் உயர்ந்து நின்றார்;
தென்னாட்டின் தலைவரிலே திறமை கூடித்
தொட்டடைய முடியாத உயரம் சென்றார்!

எங்கேனும் கேட்டதுண்டா இவரைப் போல
இமயநிகர் பெரும்புகழை யாரே கண்டார்;
சிங்கநிகர் பேச்சாலே தமிழர்க் கெல்லாம்
சீறியெழும் மறக்குணத்தை ஊட்டி விட்டார்;
செங்கதலிக் கனிஇனிக்கும் சுவையே போலச்
சொல்லினிக்கும் பாட்டெடுத்துச் சுவையைச் சேர்ப்பார்;
பொங்குதமிழ்க் கலைஞரிவர் எழுத்துச் சிற்பி;
பூப்போலும் தமிழெடுத்து மாலை கோர்ப்பார்!

சொல்லருவியாய்க் கொட்டும் கலைஞர் நாவில்
சுவையான தமிழ்மணக்கும் பேசும் பேச்சில்;
நல்லதமிழ்ச் சொல்லெல்லாம் நாஉ திர்த்தால்
நானிலத்தோர் மூச்சடக்கித் திகைத்து நிற்பார்;
சொல்லம்பு தொடுத்தாண்ட சோழன், தமிழால்
செலுநரையும் சொக்கவைத்த சீலன் நெஞ்சத்
துள்ளன்பு மாறாத பண்பால் யாரும்
துள்ளிவந்து காலில்விழச் செய்வா ரென்றும்!

தொட்டதெலாம் வெற்றிகள்தான், தோல்வி யென்று
தொட்டதையும் படியாக்கி மேலே போனார்;
விட்டதையும் விலகவில்லை, தமிழர் வாழ
ஒருநொடியும் ஓய்ந்திருக்க எண்ண வில்லை;
பட்டதெலாம் துன்பங்கள், நாட்டுக் காகப்
பறந்தோடி யுழைத்திட்ட பண்புக் கோமான்;
சட்டமெலாம் செத்தபின்னும் சிதைந்தே யோடச்
சதிராடும் அலைக்கரையில் அமைதி கண்டார்!

- **சுசீ மாணிக்கம்**, சேலம்-3..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்குபஞ்சர் மாற்று முறை மருத்துவப் பயிற்சி



## 1 வருடம் டிப்ளமோ பயிற்சி, ரெகுலர் மற்றும் தொலைத் தொடர்புப் பயிற்சி



ஒவ்வொரு மாதமும் 3 நாட்கள்

காண்டாக்ட் செமினார் வகுப்புகள் மற்றும் நேரடிப் பயிற்சி காரைக்குடியில் நடத்தப்படுகிறது.

■ அக்குபஞ்சர் ■ டி-அடிக்ஷன் ■ ஹிப்னோ யோகா ■ யோகா ■ நாடி பரிசோதனை ■ காந்த சிகிச்சை ■ எலக்ட்ரோ ஹோமியோபதி ■ ப்ரானிக் சிகிச்சை ■ தியானம் ■ கொரியன் சுஜோக் அக்குபஞ்சர் ■ மலர் மருத்துவம் ■ ரெய்கி அக்குபஞ்சர் சிகிச்சை ■ ரெஃப்லக்சாலஜி, ■ அக்கு டச் போன்ற பலதரப்பட்ட சிகிச்சை முறைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது.

இடம் : "உங்கள் தாய் வீடாகிய"

**அப்துல்லா மிஷன் மருத்துவமனை, காரைக்குடி.**



ப்ராஸ்பெக்டஸ், கட்டணம் மற்றும் இதர அனைத்து விபரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

## அப்துல்லா மிஷன் மருத்துவமனை

பெரியார் சிலை அருகில், காரைக்குடி - 630 001.

செல் : 98424 - 23082 போன் : 04565 - 233735, 238082

**கோவை, சேலம், கரூர், செங்கல்பட்டு, மதுரை, சென்னை**

ஆகிய இடங்களில் வெவ்வேறு தேதிகளில் செமினார் வகுப்புகள் நடைபெறுகிறது.

■ கோவை : 0422-2570210 ■ சேலம்: 93456-80775 ■ கரூர் : 98424-27470 ■ மதுரை : 98423-80103 ■ ஓசூர் : 98940-12700 ■ கிருஷ்ணகிரி : 98420-53729 ■ சென்னை : சைதாப்பேட்டை : 98415-12130 கோயம்பேடு : 93801-93805 நங்கநல்லூர் : 93821 08968

**www.acupunctureatama.com**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EALAIDHASON ✱ TAMIL MONTHLY ✱ R.N.I. Regd No. **55308 / 92**
R.C. No. **2449 / 98** ✱ Postal Registered No. **TN / PDK / 03 / 18-20**
Date of Publication : 10th of every Month. Posted at **RMS**, Pudukkottai.

# மியான்மா தமிழ்க் குழந்தைகள் தின விழா




***மியான்மர் (பர்மா) நாட்டில் 24-10-2018 அன்று யாங்கோன் நகர் சிவன் ஆலயத்தில் தமிழர் அறநெறிக் கழகம் நடத்திய 37-ஆம் ஆண்டுத் தமிழ்க் குழந்தைகள் தின விழா சிறப்புற நடைபெற்றது. எம்பாசி நடன ஆசிரியை, அவர்கள் குழுவினர்களின் நடனத்தில் ஒரு காட்சியைப் பார்க்கிறீர்கள். (விரிவான செய்திக் கட்டுரையும், நிகழ்ச்சி படங்களும் அடுத்த இதழில் இடம் பெறும்.)***

பெறுநர் திரு.

Published Printed and Owned by S. Vijayakumar. Printed at Ealaidhason Computer Printers, Pudukkottai - 2. Published from 26, Adappanvayal 8th Street, PUDUKKOTTAI - 622 002, Tamil Nadu, INDIA. Editor: **S. VIJAYAKUMAR** B.A.,
ealaidhason@gmail.com. / iniyasmsidhazh@gmail.com.
97 90 40 70 68 http:\\www.facebook.com/ealaidhason
Cell Phone No. : 0091- 97 90 40 70 68, 94 42 77 68 68



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org